**மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம் ,கோயமுத்தூர்**

நாள் : 12.08.2026

அ.வ.எண் : 1419/2016

(சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். )

PW 1 – ஜெயந்தி

**1, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**ஆரம்பிக்கும் நேரம் 12.29PM**

தமிழ் எனக்கு பேச எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். என் தகப்பனார் பெயர் VP வெங்கடசாமி (எ) வெங்கிடு சாமி த/பெ பெருமாள் என்றால் ஆமாம். பெருமாளின் உடன் பிறந்த தம்பிதான் குருசாமி என்றால் தெரியாது. குருசாமியின் மகன் நஞ்சப்பன்என்றால் தெரியாது. நஞ்சப்பனின் மகன் தான் இவ்வழக்கின் 1 ஆம் பிரதிவாதி VN கந்தசாமி என்றால் தெரியாது. என் தகப்பனார் எங்களுக்கு பூர்வீகம் காட்டம்பட்டி கிராமம், வரதையன்பாளையம் என்றால் ஆமாம்.

எனக்கு திருமணம் நடந்து எனது கணவர் வீட்டிற்கு செல்லும் வரை வரதையன்பாளையத்தில் தான் வசித்தோம் என்றால் இல்லை. எங்கு வசித்தேன் என்றால் எனது அம்மாவழி பாட்டி வீடு புளியம் பட்டியில் வசித்தேன். எனது பாட்டியின் பெயர் நஞ்சம்மாள். நான் எந்த வயதில் இருந்து எந்த வயது வரை புளியம்பட்டியில் இருந்தேன் என்றால் 4 வயது முதல் 23 வயது வரை. நான் மட்டும் எனது பாட்டி வீட்டில் இருந்தேனா அல்லது எனது சகோதர சகோதிரிகளும் எனது பாட்டி வீட்டில் இருந்தோமா என்றால் நான் எனது அக்கா வசந்தா தேவி, இராமசாமி மூவரும் எனது பாட்டி வீட்டில் இருந்தோம்.

எனது தகப்பனார் மற்றும் எனது தாயார் பூர்வீகமாக அவர்கள் சாகும் வரை எங்கு இருந்தார் என்றால் வரதையன் பாளையத்தில்தான்

இருந்தார்கள். எனது பெற்றோர்களுக்கு வரதையன் பாளையத்தில் பூர்வீகமாக குடியிருக்க வீடு, விவசாய நிலம், இருந்தா என்றால் இருந்தது. எந்த எந்த காலைகளில் எவ்வளவு விவசாய நிலம், விஸ்தீரணம் இருந்தது என என்னால் சொல்ல இயலாது என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் உயிரோடு இருந்த காலத்தில் அவருக்கு சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்தும், அதன் வருமானத்தில் இருந்து குடும்ப செலவுகளையும் எனது தகப்பனார் தான் பார்த்து வந்தார் என்றால் சரிதான்.

நான் கூறுவது போல நான் புளியம்பட்டியில் இருந்ததால் என் தகப்பனார் என்ன வருமானம் வந்தது என்ன செலவு செய்தார், என்ன கடன் பெற்றார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனார் இறப்பிற்கு பின்பு என் தாயார் என்ன வருமானம் வந்தது என்ன செலவு செய்தார், என்ன கடன் பெற்றார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. எங்களது குடும்பத்தின் கர்த்தா என்ற அடிப்படையில் எனது தகப்பனாரும் எனது தகப்பனார் இறப்பிற்கு பிறகு என் தாயாரும் குடும்பத்தை பார்த்து வந்தனர் என்றால் ஆமாம்.

OS 1475/2015 16.10.2015 ல் எனது தங்கை சுசிலா தாக்கல் செய்தார். நானும், சதாசிவம், வசந்தாதேவி ஆகியோர் பிரதிவாதிகளாக இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 27.11.2015 ல் வா.சா.ஆ.4 ல் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. 1419/2016 ல் நான் முதலாம் வாதி என்றால் ஆமாம். OS 1475/2015 வழக்கில் க.ச.97/2 மற்றும் 97/3 ல் 4.8 ஏக்கர் நிலம் மட்டும் சொத்து விபரமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். OS 1419/2016 இந்த வழக்கில் வேறு சொத்துக்களும் வழக்குரையின் சொத்து விபரத்தில்

கூறப்பட்டு பாகப்பிரிவினை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். OS 1475/2015 வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க என் சகோதிரி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளோம். என்ன நடிவடிக்கை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கின் விபரங்களை யார் சொன்னார்கள் என்றால் 2015 ஆம் ஆண்டு எங்களுக்கு பாகம் வேண்டும் என சதாசிவத்தை கேட்ட போதுதான் பூமியை விற்று விட்டார்கள் என தெரிந்து இந்த வழக்கிற்கு சொன்னோம்.

வா.சா.ஆ.4 ல் சமாதானமாகசென்று சமாதானமான தீர்ப்பாணை தான் பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சமாதான மனுவில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் நான் கையெழுத்து செய்யவில்லை வேறு யாரோ கையெழுத்து செய்துவிட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. OS 1475/2015 வழக்கிற்கு வழக்கறிஞரை பார்த்து வழக்கின் விபரங்களை யார் சொன்னார்கள் என்றால் எனது தங்கை சுசிலாதான் சொன்னார் அப்போது நான் அங்கு இல்லை.

என்னிடம் காண்பிக்கபடும் OS 1475/2015 ன் சமாதான மனுவில் யார் யார் கையெழுத்திட்டார்கள் என்றால் *( 729/2016 வழக்கில் வா.சா.ஆ .4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது )* ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் இந்த வழக்குரையில் உள்ள கையெழுத்து யார் யார் உடையது என்றால் ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கின் முதல் சாட்சிய நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தும் ஆங்கிலத்தில் உள்ளதால் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கப்பட்ட இந்த வழக்கின்

வழக்குரையிலும், முதல் சாட்சிய நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடையது அல்ல என்றால் ஆமாம். நான் இந்த மாதிரி கையெழுத்து போடமாட்டேன்.

*( குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )*

*முடிக்கும் நேரம் 01.06 PM*

Sd/–S.Dhanalakshmi
மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
கோயமுத்தூர்.

12.08.2026